# நட்சத்திரப் பொற்காசுகள்

முன்பு ஒரு காலத்திலே ஒரு சின்னப் பெண்பிள்ளை, அதனுடைய தாயும் தகப்பனும் இறந்துவிட்டார்கள், அதோடு அது சரியான பாவம் (வறுமை), அதுக்கு ஒரு சின்ன அறை கூட இல்லை, அதிலே சீவிப்பதற்கு, அதோடு ஒரு கட்டிலும் இல்லை, அதிலே படுப்பதற்கு, மேலும் கடைசியாக ஒன்றுமே இல்லை உடம்பிலே போட்டிருக்கின்ற உடுப்பும் கையிலே ஒரு துண்டு பாணையும் தவிர, அதுகும் ஒராள் பரிதாபப்பட்டுக் கொடுத்தது. ஆனால் அது வந்து நல்லதும் கடவுள்பக்தி உடையதும். மேலும் அதை உலகத்திலே இருந்த எல்லோரும் கைவிட்டாலும், அது கருணைமிக்க கடவுள் மேல் உள்ள நம்பிக்கையினால் இந்தப் பூமியிலே (வெளியாலே) போய்க்கொண்டிருந்தது. அப்போ அது ஒரு கஷ்டப்பட்ட மனிதனை சந்தித்தது, அவர் சொன்னார்: 'ஐயோ, எனக்கு ஏதாவது சாப்பிட தருவாயா, எனக்கு சரியான பசி.' ஆது அவருக்கு அந்த முழுத்துண்டு பாணையும் கொடுத்துவிட்டு சொன்னது: 'கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்', என்றுவிட்டு மேலும் சென்றது. அப்போ ஒரு பிள்ளை வந்தது, அது சிணுங்கிக்கொண்டு சொன்னது: 'என்னுடைய தலை சரியாக குளிர்கிறது, எனக்கு ஏதாவது தருவாயா, அதனாலே நான் தலையை மூடக்கூடியதாக.' அங்கே அது தன்னுடைய தொப்பியை கழற்றி அதை பிள்ளைக்கு கொடுத்தது. மேலும் அது இன்னும் கொஞ்ச நேரம் போன

பின்பு, திருப்பி ஒரு பிள்ளை வந்தது அதுக்கு ஒரு மேல்ச்சட்டை இல்லாததால் நடுங்கிக்கொண்டு இருந்தது: அப்போ அது தன்னுடையதை அதற்கு கொடுத்துவிட்டது. இன்னும் கொஞ்சத்திற்குப் பின் அங்கே இன்னுமொன்று கெஞ்சியது ஒரு பாவாடைக்கு, அதையும் அது தன்னிடமிருந்ததைக் கொடுத்துவிட்டது. கடைசியாக அது ஒரு காட்டுக்கு வந்தது, அப்போ சரியான இருட்டாகியும் விட்டது. அங்கே இன்னுமொன்று வந்து ஒரு உள்சட்டைக்கு கெஞ்சியது, அப்போ அந்த கடவுள்பக்தியுள்ள பெண்பிள்ளை யோசித்தது: இப்போ நல்ல இருட்டான இரவு, இங்கே உன்னை ஒருவரும் பார்க்கமாட்டார்கள், நீ உன்னுடைய உள்ச்சட்டையை கொடுக்கலாம், அப்போ உள்சட்டையை கழற்றி அதையும் கொடுத்துவிட்டது. மேலும் இப்போ அது எப்படி நிற்கிறது ஒன்றுமே இல்லாமல், அப்போழுது திடீரென்று ஆகாயத்திலிருந்து நட்சத்திரங்கள் விழுந்து பின் அவை கெட்டியான பளபளப்பான பொற்காசுகளாக மாறின: மேலும் எப்போ அது தன்னுடைய உள்ச்சட்டையைக் கொடுத்ததோ, அப்பவே அதுக்கு ஒரு புதியது கிடைத்துவிட்டது, அதோடு அது மிகவும் நல்ல ரக துணியில் செய்யப்பட்டது. அப்போ அது அந்த பொற்காசுகளைப் பொறுக்கி சேகரித்து வாழ்க்கை பூராக பணக்காரியாக இருந்தது